அவொ! மிளொ !! ஹொடொ !!!

# LAABH SAMACHAR

Volume : 09 Issue : 01 April 2020 Tamil & English Monthly Price Rs. 10/-

Official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE

Emirates IndiGo Lufthansa spiceJet flying for everyone

அஸ்கி பிளையிட் டிக்கெட் அவ்ரோஜொல் உன்னோ மோளும் அப்பை

K.K. Nagar, Madurai. Mob : 9787 066 066

வேதவல்லி ஹாலிடேஸ்

மருத்துவ துறை, சுகாதாரத் துறை, காவல் துறை, நமக்காக பணிபுரியும் இதர அரசுத் துறை, வங்கிகள் மற்றும் தன்னார்வல நண்பர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்...





SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி


18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை–1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536











## ஸ்ரீ சுகந்த தூப தீர்த்தார்யர்

ஸௌராஷ்ட்ர இலக்கிய வரலாறு என்று எடுத்துக் கொள்ளும்போது நமக்கு 1551ஆம் ஆண்டில் பிறந்து 110 ஆண்டுகள் வரை வாழ்ந்த மகான். ஸ்ரீசுகந்த தூபதீர்த்தார்ய சுவாமிகளின் சில கீர்த்தனைகள் மட்டும் கிடைத்துள்ளன. இவர் தஞ்சையில் பிறந்து திருச்சி ஸ்ரீரங்கநாதருக்கு நறுமணமிக்க சாம்பிராணி தூபம் ஏற்றி வழிபாடு செய்துவந்தார். இவரது பெயர் தத்தாத்ரேயர். தூப வழிபாடு செய்து வந்ததால் இவரை தூபதீர்த்தர் என்றும் அழைப்பர். எனவே இவருக்கு ஸ்ரீசுகந்த தூபதீர்த்தர் என்ற பெயர் நிலைத்து விட்டது. தென்னிந்தியாவில் புலம் பெயர்ந்த ஸௌராஷ்டிரர்களுக்கு மொழி இலக்கியம் என்ற வகையில் வெகுகாலமாக இருந்துவந்த இருண்ட நிலை மாறியது இவருடைய காலம் முதல்தான் என்றே சொல்லவேண்டும். இவர் மழை வேண்டி ஸௌராஷ்ட்ர மொழியில் பாடிய பாடலால் மழை பெய்து நாட்டில் பஞ்சம் நீங்கியதாக கர்ண பரம்பரை கதை உள்ளது. அந்த கீர்த்தனைதான் நமக்கு முதல் இலக்கியம். பின்னர் மழையை நிறுத்தவும் நாட்டைக் காக்கவும் இவர் ஸ்ரீரெங்கநாதரை துயில் எழுப்ப பாடிய சுப்ரபாத பாடலும்தான் நமக்கு கிடைத்த முதல் இலக்கியம்.

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| T.S. Suraj Lal | Member | 98436 20908 |
| **PRO** | | |
| P.M. Murali | Chairman | 94434 68476 |
| S.K.B. Chandraprakash | Secretary | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |



# தலைவர் அறிக்கை

ꢀꢥ꣄ꢗꢶ ... நமஸ்கார்...

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டுள்ளது, தற்போது மேலும் 19 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. அங்கத்தினர்கள் அனைவரும் அரசின் உத்தரவை ஏற்று நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வைரஸ் பாதிப்பினால் அனைவரின் வாழ்வாதாரம் மற்றும் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த பாதிப்பு மேலும் தொடராமல் இருக்க நாம் சமூக இடைவெளியை கடைபிடித்தே ஆக வேண்டும்.

தொழிலாளர்களும், வாடிக்கையாளர்களும் நமது தொழில் வளர்ச்சிக்கு முக்கியமானர்கள், அவர்களின் உடல் நலனில் இந்த தருணத்தில் அக்கறை செலுத்தத் தவறக்கூடாது.

மத்திய மாநில அரசு மக்களைக் காக்க திறமையாக செயல்பட்டு வருகின்றனர். மருத்துவர்கள் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் காவல் துறையினர் கொரோனா தடுப்பு பணியில் தீவிரமாக பணியாற்றி வருகின்றனர் அவர்களை நமது சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவின்றி தவித்த முதியவர்கள் மற்றும் ஏழை மக்களுக்கு உணவளித்து வரும் சமூக ஆர்வலர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ஊரடங்கு முடிந்த பிறகு தொழில் முனைவோர்களுக்கு, பணியாளர்கள் மற்றும் நிதி போன்ற பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டி வரும். எனவே தொழில் முனைவோர்கள் கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- குமரன் B ஜகுவா

### திருக்குறள்

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்.**

**பா⁴வ ப⁴ரிஸாக³ர் த³ட்டன் த³டு³னானு**
**தே³வு பத³மிள்ளாத் தென்.**

ꢩꢵꢮ ꢩꢶꢬꢯꢵꢔꢬ꣄ ꢣꢜ꣄ꢜꢥ꣄ ꢣꢞꢸꢥꢵꢥꢸ
ꢣꢾꢮꢸ ꢦꢣꢪꢶꢥ꣄ꢥꢵꢡ꣄ ꢡꢾꢥ꣄ । ꣑꣐

இறைவனின் திருவடிகளைச் சேர்ந்தவர்களே பிறவிப் பெருங்கடலைக் கடப்பார்கள்; சேராதவர்களால் கடக்க இயலாது.

# பொதுச்செயலாளர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

21.03.2020 - திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் திரு. சரவணன் அவர்கள் நிலையூர் கைத்தறி நகரில் "கைத்தறி பூங்கா" அமைக்க சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்தார், அவருக்கு நன்றி கூறி கடிதம் அனுப்பப்பட்டது.

31.03.2020 - MSME நிறுவனங்களுக்கு சலுகை கோரி பிரதமர், நிதி அமைச்சர் மற்றும் மத்திய MSME துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

07.04.2020 முற்றிலும் புதுமையான முறையில் இந்த மாத தொழில் கூட்டம் **ZOOM APP** காணொலி மூலம் நடத்தப்பட்டது இதில் 80-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். **BUSINESS AFTER LOCKDOWN** என்ற தலைப்பில் திரு எஸ் ஆர் நாகேஸ்வரன் அவர்கள் பேசினார்கள் சேம்பர் தலைவர் திரு குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமை தாங்கினார். T.R. சரவணன் அவர்கள் இந்த கூட்டத்தினை ஏற்பாடு செய்தார்.

11.04.2020 - நமது சேம்பர், ரெட்கிராஸ் அமைப்பின் துணையுடன் திருநகர் ஸ்ரீநிவாசா காலனி மற்றும் மஹாலெட்சுமி காலனியில் நமது நெசவாளர் குடும்பத்திற்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

***K.K. தினேஷ்***

## *Feed back*

It is nice. 👍 One suggestion..
Why not try one or two pages or articles with English or Devnagri alphabets- to make it to global reach. Not all Sourashtrians in other states study Tamil.. Even my son, though in chennai learned Sanskrit for 2 years as Second language and then moved to French. We need to make it easy for Global Audience. Regards.

Bala V. Kutti. Sr. President , SCC

முகப்பு பக்கம், உள் பக்கங்கள்,
Designs, Colours. Subjects அனைத்தும்
அருமை! அருமை!! அருமை!!!
D.R. வாசுதேவன், பரமக்குடி.

# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

உலகமே கண்ணுக்கு தெரியாத ஒற்றைக் கொடிய அசுரனை எதிர்த்து போராடிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் மக்களின் மனநிலையை எண்ணிப் பார்த்தால் வியப்பாக உள்ளது. போர்களமோ, விளையாட்டு களமோ எதுவாக இருந்தாலும் வெளியிலிருந்து பார்வையாளனாக ஆயிரமாயிரம் கருத்துகளைச் சொல்லலாம், அது மிகவும் எளிதான காரியம். ஆனால் களத்தில் நின்று பணிபுரிவர்களுக்குத் தான் தெரியும் சூழலும், அதன் ஆழமும்.

ஒரு விழாவில் கலந்து கொள்ள வந்தவர்களை நலம் விசாரிக்காமல் அவர்களோடு வராதவர்களைப் பற்றித் தான் அதிக அக்கறையுடன் விசாரிப்பார்கள். இது யாதார்த்தமாக நடைபெறும் ஒரு வழக்கம். அது போலத் தான் இன்று நாட்டில் ஆட்சி செய்பவர்கள் என்ன செய்கிறார்கள், எப்படி இந்த சூழலை சமாளிக்கிறார்கள் என்று சற்றும் எண்ணிப் பார்க்காமல் ஆட்சியில் இல்லாதவர்களை பார்த்து இந்நேரம் இவர்கள் ஆட்சி செய்திருந்தால் நமக்கு எவ்வளவு நன்மைகள் கிடைத்திருக்கும் தெரியுமா என்று நிகழ்காலத்தில் நடைப்பெற்றுக்கொண்டிருக்கும் சூழலுக்கு தகுந்தாற்போல் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளாமல் நிழலை நிஜமென கனவு காண்பவர்கள் எப்போது தான் திருந்துவார்களோ......

மருந்தே இல்லாத கொரோனா என்ற கொடிய நோய்க்கு சமூக விலகல் ஒன்றே சிறந்த மருந்து என்று உலகமே சொன்னாலும் அதனை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் சிலருக்கு வருவதில்லை.

நாட்டு மக்களுக்காக இந்த போரில் அரசும், முப்படைகளாக இருந்து வரும் மருத்துவம், காவல் மற்றும் சுகாதாரம் ஆகிய துறை நன்மக்களை நாம் நினைத்து, மதித்து நடந்து கொரோனா என்ற கொடிய அசுரனை வென்று 2020ல் பாரத நாடு வல்லரசாகும் என்ற சொன்ன முன்னாள் ஜனாதிபதி மேதகு அப்துல் கலாம் ஐயா அவர்களின் கூற்றை மெய்யாக்க துணைபுரிவோம்.

மேலும் இந்த மாத இதழுக்கு பிழைத்திருத்தம் செய்து ஆலோசனைகளை வழங்கிய மருத்துவர் A.R.கணேஷன், முனைவர் பட்ட ஆய்வாளர் ம.க.துர்காதேவி, S.S.ராம்சுந்தர் மற்றும் K.S.சிவக்குமார் ஆகியோர்களுக்கு நன்றிகள்...

***B.S. ஜெனார்த்தனன்***

BVK GROUP

Best Compliments from

**Shri. Bala V Kutti**

Chairman

**BVK GROUP OF COMPANIES**

"Kothari Building" 4th floor 114 M G Road, Nungambakkam,
Chennai - 600 034, India. Phone : +91 44 2833 1310 / 0867

Indowind Enegry Ltd | Indus Finance Corporation Ltd | Indeco Ventures limited | Bekae Properties Pvt Ltd





**144 தடையிலும் 07.04.2020 அன்று**


**தடையில்லாமல் நடந்த நமது சேம்பரின்**

**மாதாந்திர நிகழ்ச்சி**

# BUSINESS AFTER LOCKDOWN

**காணொலி மூலம் கலந்து கொண்டவர்கள்**







# BUSINESS AFTER LOCKDOWN




**Sri. NAGESWARAN SOMI**
(Ex. MD. ITCOT Consultancy)
Director,
Crispee Solutions Strategic Consulting, Chennai.

இக்காணொலிக் கூட்டத்திற்கு தலைவர் திரு. ஜகுவா B குமரன் அவர்கள் தலைமைத் தாங்க, சிறப்பு பேச்சாளர் திரு நாகேஸ்வரன் அவர்களை துணைத் தலைவர் திரு. T.R. மோஹன்ராம் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். மேலும் இக்கூட்டத்திற்கு 80க்கும் அதிமான அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர். அங்கத்தினர் பலரும் கேட்ட கேள்விகளுக்கு திரு. நாகேஸ்வரன் அவர்கள் சிறப்பாக பதில் அளித்தார். கௌரவ செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நன்றி நவில இக்காணொலி கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

இந்த காணொலி கூட்டத்தை ஒருங்கிணைத்த
T.R. சரவணன்
T.M. ரூபேஷ் பாபு
S.S. பிரேம்குமார் மற்றும்
A.T. பாஸ்கர்
அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# BUSINESS AFTER LOCKDOWN

1. How pandemic is different from Natural Disaster?
2. Likely Scenario after Lock down
3. Recommissioning Strategy
4. Business continuity strategy
5. Growth Strategy
6. Future Ready

## 1. . How pandemic is different from Natural Disaster?

Pandemic Characteristics and Impact

Widespread impact:

There may be little outside assistance.

Not a physical disaster:

A pandemic is not a physical disaster. It has some unique characteristics that require implementation of activities to limit contact such as restriction of movement, quarantine, and closure of public gatherings.

Duration:

A pandemic would not be a short, sharp event leading immediately to commencement of a recovery phase.

Note that the pandemic may come in waves of varying severity over time.

Primary effect is on staffing levels:

You should plan for up to 50% to 80% employee absences for periods of about two weeks.

At the height of a severe pandemic wave, and lower levels of employee absence for a few weeks either side of the peak. Overall a pandemic wave may last about 8 weeks.

## 2. Likely Scenario after Lock down

The Micro, Small and Medium Enterprises (MSME) sector has emerged as a highly vibrant and dynamic sector of the Indian economy over the last five decades. It contributes significantly in the economic and social development of the country by fostering entrepreneurship and generating largest employment opportunities at comparatively lower capital cost, next only to agriculture. MSMEs are complementary to large industries as ancillary units and this sector contributes significantly in the inclusive industrial development of the country.

There are 6.4 Crore MSME according to Ministry of MSME,GOI.

Tamil Nadu has about 50 lakh MSMEs. on All India basis , MSME contributes

• 30% of Country's GDP &
• 48% of exports.

• Now, lock down from March 25,2020 has been extended till May 3,2020 with permission for MSME in non hot spots / Containment zones from April 20,2020



• Government of India has issued a detailed notification - Ministry of Home Affairs MHA Order No 40-3/2020 -DM-1-(A) Dated APRIL 15,2020 . MSME may refer the circular. A snap shot in Tamil is given in next slide.

• The notification gives specific details of activities permitted and not permitted during lock down . Substantial relaxation has been given from April 20,2020 which includes that for MSME for non hot spot areas.

• Tamil Nadu government will specify the containment zones and other restricted zones . MSME may keep a watch for GoTN classifications.

• Present status of COVID 19 district wise as of April 14,2020 in Tamil Nadu is depicted herewith.

## Top 10 Tips for Recovery & Continuity

1. Implement your Safety & disaster recovery plan. Assess damage and consider if a backup location is needed.
2. Shift your team and leadership from preparedness to recovery.
3. Implement a communications strategy to ensure that the facts go directly to employees, suppliers, customers, and the media.
4. Encourage employees to take appropriate actions and communicate.
5. Document damage, file insurance claims, and track recovery.
6. Cultivate partnerships in the community with businesses, government, and nonprofits.
7. Provide employee support and assistance.
8. Connect with chambers of commerce, economic development, and other community support organisations.
9. Cash in King - Prioritise Cash over Profits
10. Document lessons learned and Getting Future ready.

## ஊரடங்கு தளர்வுக்குப் பிறகு உடனடியாக மீண்டெழும் துறை?

தேசிய அளவில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு வாபஸ் பெறப்பட்ட பிறகு என்னென்ன துறைகள் உடனடியாக மீண்டெழும் என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில், சரக்குப் போக்குவரத்து, சேமிப்பு கிடங்கு, டிஜிட்டல் பொழுதுபோக்கு, மருந்துகள், மருத்துவ மற்றும் சுகாதார உபகரணங்கள் உள்ளிட்ட துறைகள் உடனடியாக மீண்டெழும் என்று கண்டறியப்பட்டுள்ளன.

அதேபோன்று, இ-காமர்ஸ் நிறுவனங்களும் விரைவில் சகஜநிலைக்கு திரும்பும் என தெரியவந்துள்ளது. அதேசமயம், பொதுமக்களின் நடத்தை சார்ந்த துறைகள் மீண்டெழ காலதாமதமாகும். குறிப்பாக, சுற்றுலா செல்வது, ஹோட்டல்களில் தங்குவது, வெளிநாடுகளுக்கு பறப்பது, ஷாப்பிங் மால்களுக்கு செல்வது ஆகியவற்றை பொதுமக்கள் பெரிதும் தவிர்க்க விரும்புவர்.

அதனால், அந்த துறைகளில் உடனடி மீட்சியை எதிர்பார்க்க முடியாது என்பது ஆய்வின் முடிவில் தெரியவந்துள்ளது. நன்றி - தினமணி

## மயிலாடுதுறை தனி மாவட்டம் தமிழக அரசு உத்தரவு

நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருந்து மயிலாடுதுறை தனி மாவட்டமாகப் பிரித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

நிர்வாக வசதிக்காகவும், மக்களுக்கு அரசின் திட்டங்கள் விரைந்து சென்றுடைய வேண்டும் என்ற நோக்கில் நாகப்பட்டினம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து தமிழகத்தின் 38 ஆவது மாவட்டமாக மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்கப்படும் என்று சட்டப் பேரவையில் முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி அறிவித்தார்.



# மனம் மணம் வீச...

மனம் செம்மையானல் மந்திரம் ஜபிக்கத் தேவையில்லை ஆனால் மனம் செம்மை அடைய மந்திரம் ஜபித்தால் தான் முடியும். மந்திரம் ஜபித்தல் என்பது ஒரு சொல்லை திரும்பத் திரும்ப சொல்வது. மனம் ஒரு குரங்கு அதனை கடிவாளம் போடுவது என்பது மிகவும் கடினமானது, அதற்காகத் தான் நம் முன்னோர்கள் பல அறிவியல் சார்ந்த விஷயத்தை ஆன்மிகத்தில் உட்புகுத்தி வைத்துள்ளார்கள். அதனை புரிந்துகொள்ள நமக்கு தடையாக இருப்பதும் இந்த மனம் தான். ஏனெனில் நமது மனம் கற்பனையில் பரந்து விரிந்து திரியும் சுபாவம் கொண்டது. அதனால் தான்

நம் மனம் எண்ணங்களைக்
கோடிக் கணக்கில் தனக்குள் எண்ண வைக்கும்
மனதில் தோன்றும் பேச்சுக்களை
தனக்குள்ளே ஆயிரக் கணக்கில் பேச வைக்கும்,
மனதால் திட்டங்களை
நூற்றுக் கணக்கில் வகுத்துவிடும்
மனம் கொள்கைகளை
பத்துக் கணக்கில் போட்டும்விடும்

ஆனால் அதனை ஒன்றையாவது செயல்படுத்த நினைக்கும் போது அதற்கு வரும் சோதனைகள் என்னற்றவை. அந்த செயல் செய்வதற்கு முதல் தடையே நமது மனம் தான். பிறகு தான் மற்றவை. நமது மனதையும் தாண்டி சோதனைகளைச் சாதனைகளாகச் செய்ய நினைக்கும் செயல்கள் சிலருக்கு ஒரு சில சோதனைகளில், பலருக்கு பல சோதனைகளில் சாதனைக்கான வழி பிறக்கும், ஆனால் சிலருக்கோ சோதனையால் வரும் வலியானது, வளி மண்டலத்திற்கு சென்று விடமாட்டோமா என்று தோன்றும் அளவில் இருக்கும். ஏனெனில் இந்த உலகத்தில் வரலாற்றைப் படிக்க விரும்பும் மக்கள், வரலாற்றைப் படைக்க நினைப்பவனை விரும்புவதில்லை. அதற்கு பெற்றோர்கள், உற்றார் உறவினர்கள்,சமூகம், கல்வி என பல தடைகள்.

அத்தனை தடைகளையும் எதிர்கொண்டு செய்யும் செயல் வெற்றி பெற மந்திர உச்சாடனம் செய்வது போல் திரும்பத் திரும்ப நாம் செய்ய நினைக்கும் நல்ல செயல்களை எண்ணிக்கொண்டே இருக்க வேண்டும்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலம்மிக்க
நல்லார்சொல் கேட்பது வும்நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே, அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

என்ற ஔவையின் மூதுரையை ஔடதம் அளவிற்காவது மனதில் நினைத்துக் கொண்டு செயல்படுத்தி வந்தால் நமது மனதில் தோன்றிய செயல்கள் நறுமணமாக அனைவருக்கும் சென்றடையும்.



தமிழ், ஸௌராஷ்ட்ர மொழி சொற்பொழிவாளர்
இயற்றமிழ் விற்பன்னர், சொல்லின் செல்வர்
பட்டிமன்ற பராங்குசர்
முனைவர்
கலைமாமணி
**பேராசிரியர் தா.கு. சுப்பிரமணியன்**
அவர்கள் 20.04.2019 அன்று
மண்ணுலகை விட்டு
விண்ணுலகையும் தமிழால்
ஆளச் சென்ற
பட்டிமன்ற பராங்குசர் அவர்களின் நினைவில்....




# செயல் திறன் வள்ளுவரின் பார்வையில்



சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். – 664

இச் செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லுதல் எல்லோர்க்கும் எளியமையானது, ஆனால் சொல்லிய படி செய்து முடித்தல் என்பது அரிதான காரியமாகும். அதற்காகத் தான் வள்ளுவர் செயல் என்ற சொல்லுக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளதாகத் தெரிகிறது.

கோடையில் இடி இடிப்பதினால் குளம் நிரம்புவதில்லை, மாறாக மழை பெய்தால் தான் குளம் நிரம்புகிறது. அது போல செயல்களை சொல்வதை விட செயலை செய்து காட்டுவதே சிறந்தது என்ற காரணத்தால் வள்ளுவர் செயல்திறனைப் பன்னிரண்டு தலைப்புக்களில் நூற்று இருபது குறள்களில் மட்டும் விளக்கவில்லை. "செய்" என்ற சொற்களும், அதைத்தழுவிய சொற்களுமாக 53 சொற்களை 215 குறள்களில் பதித்துச் செயல்திறனைப் புகுத்தியிருக்கிறார், இதன் வாயிலாக செயல் என்ற சொல்லுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பது தெளிவாகிறது.

செயல்திறனுக்கு நல்லதை எண்ண வேண்டும்,
பெரியதாக எண்ண வேண்டும்,
எப்போதும் அதனை அழுத்தமாக எண்ண வேண்டும்,
அதனை செய்ய ஆழமாக சிந்திக்க வேண்டும்.

நம் மனம் எதைப்பற்றி தொடர்ந்து சிந்தித்து கொண்டிருக்கிறோமோ அப்படியே நமக்கு நல் வழி காட்டும் என்பது ஆன்றோர் வாக்கு, அதற்காக தான் மனம் போல் வாழ்வு என்று நம் முன்னோர்கள் நமக்கு உரைத்துள்ளனர்.

ஆயக் கலைகள் 64ல் அடங்கியுள்ள அனைத்து வகையான கலைகள், தொழில்கள், சேவைகள், என அனைத்தும் ஒரு வகையான செயல்களே.

வெற்றி – தோல்வி, வாழ்த்து – வசை என்று பாராமல் துணிந்து தொடர்ந்து செய்ய வேண்டிய செயல்களை செய்ய வேண்டும். செய்யும் செயல்களில் வித்தியாசமான செயல்களை செய்ய வேண்டும். உங்களால் வெல்ல முடியும் என்ற புத்தகத்தின் முகப்பு அட்டையில் ஆசிரியர் ஷிவ் கேரா அவர்கள் வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்களை செய்வதில்லை மாறாக அவர்கள் செய்வதையே வித்தியாசமாக செய்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். அதையே திருவள்ளுவர் அவர்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே திருக்குறளில் விளக்கியுள்ளார். திருக்குறளில் செயல்திறன் மிக விரிவாக, தக்க உவமைகளோடு காட்டப் பல இடங்களில் உவமையாகப் பசு, புலி, மான், எலி, நாகம், அன்னம், ஆமை, சிங்கம், காகம், கூகை, முதலை, கொக்கு, புழு முதலியவைகள் வந்து விளையாடுகின்றன என்றாலும் மனிதனைவிட அதிக வலிமை உள்ளதும், மனிதனைவிடப் பெரிய உருவமும், மனிதனைப்போல நூறாண்டு வாழ்வதுமாகிய யானைகளைத்தான் செயல் திறனுக்கு உவமையாகக் கூறவேண்டுமென்று எண்ணிய, வள்ளுவர் திருக்குறளில் ஒரு யானைக் கூடத்தையே அமைத்து, அதில் எட்டு யானைகளைக் கட்டி வளர்த்திருக்கிறார் என்று தெரிகிறது.




RTC
தரமான டைல்ஸ்கள், சரியான விலையில்
மன நிறைவுடன் வாங்க...
ரிஜென்சி டிரேடிங் கம்பெனி
5, பெசன்ட் ரோடு, PTR கல்யாண மகால் பின்புறம்,
சொக்கிகுளம், மதுரை-625 002.
செல் : 73737 21281, 98428 21281, 99449 05051
அனைத்து முன்னணி கம்பெனி டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்



O.V.K. பாஸ்கரன்
V.K. ஜெயசங்கர்





## பெரியதைச் செய்

### முதல் யானை

வேட்டைக்குச் செல்வதானால் முயல் வேட்டைக்குச் செல்வதைவிட யானை வேட்டைக்குப் போவது நல்லது என்று கூறுகிறார். முயலை வென்று வெற்றிபெறுவதைவிட யானை வேட்டைக்குப்போய்த் தோல்வி அடைந்தாலும் சிறப்பே என்று வள்ளுவர் கருதுகிறார். ஒருவன் யானை வேட்டைக்குப்போய், யானையையும் கண்டு, குறிபார்த்து வேலையும் வீசி எறிந்து, குறி தவறி, யானையும் பிழைத்தோடிப்போய், வேலையும் இழந்துவிட்டு வெறுங்கையோடு திரும்பி வருகிறவனைப் பார்த்து. "வீரன்" என்று வள்ளுவர் கூறுகிறார்.

**கான முயலெய்த அம்பினில் யானை**
**பிழைத்தவேல் ஏந்தல் இனிது (772)**

இக்குறள் சிறுசெயல்களிலே முயன்று வெற்றி பெறுவதைவிட, பெரிய செயல்களிலே முயன்று தோல்வி அடைவது சிறந்தது என்ற புதுக்கருத்தை விளக்குகிறது. இது முதல் யானை.

**சத்தான உணவுகளை உண்போம், ஆரோக்கியமாக வாழ்வோம்.**

## இடனறிந்து செய்

### இரண்டாவது யானை

போர்க்களத்தில் ஒரு யானை களத்தினுள்ளே நுழைந்து கூர்மையான வேலைத் தாங்கிப் போரிடவந்த வீரர்களை எல்லாம் தன் துதிக்கையால் வாரித் தரையில் அடித்துக் கொன்று குவித்தது. அன்று மாலை, அந்த யானை நீர் அருந்த ஏரிக்குச் சென்றபொழுது சேற்றில் காலை விட்டுக் கொண்டது. காலை எடுக்க முடியவில்லை, நகர முடிய வில்லை, துன்பப்படுகிறது. அப்போது பின்னால் ஒரு நரி வந்து யானையின் உடலைக் கடிக்க ஆரம்பிக்கிறது, யானையால் திரும்பி நரியை விரட்ட முடியாமல், சேற்றிலேயே நின்று போராடி இறுதியில் வேதனைப்பட்டுச் சாகிறது. அதற்கான இரண்டாவது யானைக்கான குறள் இது

**காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா**
**வேலாள் முகத்த களிறு (500)**

காலையில் ஆறடி நீளமுள்ள வேல்களை வைத்திருந்த வீரர்களை யானை கொன்றது. இதற்குத் துணைசெய்தது போர்க்களத்தில் உள்ள கெட்டிநிலம். மாலையில் அரை அங்குல நீளமுள்ள நகம்படைத்த நரியை விரட்டத் துணை செய்யாதது சேற்றுநிலம். இதிலிருந்து செயல்திறனுக்கு பெரிதும் தேவை இடனறிந்து செய்தல் என்று தெளிவாக தெரிகிறது. இது இரண்டாவது யானை.

**... இதன் தொடர்ச்சி அடுத்த இதழில் தொடரும்.**



# Power of Compounding – கூட்டு வட்டியின் சக்தி

நமது முதலீடு நீண்ட கால அடிப்படையில் அமைத்து கொள்வதால் நமக்கு கிடைக்கும் பலன்கள் மிகவும் அற்புதமானவை நமது முதலீடும் நன்றாக வளர்ந்து நமது கனவுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் மிகவும் உறுதுணையாக இருக்கும். உதாரணமாக நமது முதலீடு ஐந்து வருடங்களில் இரு மடங்கு ஆகும் பட்சத்தில் தோராயமாக கூட்டு வட்டி 15% நமது 10 லட்சம் முதலீடு முப்பது வருடங்களில் சுமார் 6 கோடியே 40 லட்சமாக உயரும்.

| 10 லட்சம் முதலீடு | |
|---|---|
| வருடம் | மதிப்பு |
| 5 | 20,00,000 |
| 10 | 40,00,000 |
| 15 | 80,00,000 |
| 20 | 1,60,00,000 |
| 25 | 3,20,00,000 |
| 30 | 6,40,00,000 |

வீடு வாங்கும் நிலையில் உள்ளவர்கள் தமது நீண்ட கால தேவைக்கு (உறைவிடம் மற்றும் வீட்டின் மதிப்பு உயருதல்) கருத்திற்க் கொண்டே முதலீடு செய்கிறார்கள். மேலே குறிப்பிட்ட அட்டவணையில் பாதி அளவு கிடைத்தாலும் சுமார் 3 கோடிக்கும் அதிகமாக கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது இது போன்ற முதலீடு செய்வதற்கு தங்களின் தேவை மற்றும் ரிஸ்க் எடுக்கும் திறன் ஆகியவற்றை கருத்தில் கொண்டே மதிப்பும் வேறுபடும் சிறுவயது முதலே சேமிக்கும் பழக்கத்தை நமது இளைய சமுதாயத்தினர் ஏற்படுத்திக் கொண்டால் செல்வ செழிப்பை தங்களது ஆக்கிக் கொள்ளலாம் என்பதில் ஐயமில்லை.

சுரேஷ் மற்றும் ரமேஷ் இருவரும் நண்பர்கள் கூட்டுத் தொழில் செய்துவருபவர்கள் சுரேஷ் கொஞ்சம் உல்லாச பேர்வழி தமது சம்பளத்தின் பெரும்பகுதியை சினிமா சுற்றுலா மற்றும் கேளிக்கைகளில் செலவு செய்பவர் ஆனால் ரமேஷ் தனது சம்பளத்தில் சேமித்து வைப்பதில் தனி ஆர்வமாய் இருப்பவர்.

| | ரமேஷ் | சுரேஷ் |
|---|---|---|
| சேமிக்க ஆரம்பித்த வயது | 18 | 25 |
| சேமித்த காலங்கள் வயது வரை | 25 | 62 |
| மொத்த காலங்கள் | 8 | 38 |
| சேமித்த தொகை-வருடத்திற்கு | 50,000 | 50,000 |
| மொத்தம் சேமித்த தொகை | 4 லட்சம் | 19 லட்சம் |
| 40 வயதில் மதிப்பு | 55,85,00,000 | 27,82,000 |
| 50 வயதில் மதிப்பு | 2,25,00,000 | 1,22,00,00 |
| 60 வயதில் மதிப்பு | 12,08,00,000 | 6,71,00,000 |
| @ CACR of | 15% | 15% |

(15 சதவீதத்தில் மதிப்பு உயரும் பட்சத்தில்) இதனை Alber Einstein அழகாக சொல்லியுள்ளார்கள் 'Compound interest is the eighth wondedr of the world. He who understands it, earns it. He who doesn't, pays it. அதாவது கூட்டு வட்டியை எட்டாவது உலக அதிசயம் என்கிறார்


நமது உறுப்பினர்கள் அனைவரும் தங்களது நீண்டகால கனவை நனவாக்கிக் கொள்ள தகுந்த ஆலோசனை பெற்று தங்கள் பணத்தை முதலீடு செய்து செல்வம் வளம் மிக்க வாழ்க்கையை வாழ ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வாழ்த்துகிறது.

S.S. ராம்சுந்தர்


GSTIN : 33AADFN8595N1ZK ESTD :1968
NIVARAN SAKTHI
133-A, East Masi Street, 4 Feet Lane,
Madurai - 625 001. Ph : 0452 4230330, 8903534438
Website : www.jaiganga.com Email : jaigenga@gmail.com
ஆடைக்கு அளவு எடுக்கும் முறை
பேண்ட் இடுப்பு சுற்றளவும் & பேண்ட் உயரம் மட்டும் போதும் சர்ட் அளவு எடுக்காதீர்கள் இதற்கு உண்டான சர்ட் வைத்து அனுப்புவோம்
சர்ட் மட்டும் வேண்டுமானால் இடுப்பு சுற்றளவு மட்டும் போதும் மற்ற அளவு தேவையில்லை
HIP 34" LENTH 38"
ஆடைகள் 2 வருடம் உழைப்பு உத்திரவாதமுண்டு
S.T. கொரியரில் செலவு வசூல் செய்யாமல் யூனிபார்ம் அனுப்பி வைப்போம்
INDIAN BANK A/C No.429080809 IFSC : IDIB000M129
SOUTH MASI STREET, MADURAI- 625 001.
NIVARANSAKTHI - Ph : 8903534438
குறைந்த லாபம் வைத்து தொழில் தர்மமாக செய்து வருகிறோம்.
52 ஆண்டுகளாக வளர்ந்து வருகிறோம்.
TN.GOVT.NURSING SERVICE (UNIFORMS)



போலீஸ் ஸ்டேஷனிலிருந்து 2வது கடை
காக்கி சர்ட், பேண்ட்
ஆட்டோ, லாரி டிரைவர்கள் அந்த கார்டுடன் வந்தால் மட்டும் சர்ட் ரூ.230 பேண்ட் ரூ.270
ஒரு ஜோடி ரூ.500 மட்டும்
கார்டு இல்லை என்றால் ரூ.650 ஆகும்
ஆடை 3வரு. கால உழைப்பிற்கு உத்ரவாதம் உறுதி
ஆடைக்கு அளவு எடுக்கும் முறை
பேண்ட் இடுப்பு சுற்றளவும் மற்றும் பேண்ட் உயரம் மட்டும் போதும், சட்டைக்கு அளவு தேவையில்லை சரியான சர்ட் வைத்து அனுப்புவோம்.
சர்ட் மட்டும் வேண்டுமானால் இடுப்பு சுற்றளவு மட்டும் போதும் மற்ற அளவுகள் வேண்டாம்
உதாரணம் ஆனந்தம் HIP 35" LENTH 39"
ATM-பாங்கில் பணம் கட்டிவிட்டு ரசீது நமக்கு வாட்ஸ்அப்பில் அனுப்புங்கள்
S.T.குரியரில் செலவு வசூல் செய்யாமல் சரக்கு அனுப்பி வைப்போம்
A/C No.30223714442 IFSC : SBIN 0002289
SBI, AMMAN SANNATHI, MADURAI -1.
JAIGENGA BRASSIERS Ph : 89035 34438
52 ஆண்டுகளாக சேவை செய்து வளர்ந்து வரும்
ஜெய்கெங்கா
ஆடை தயாரிப்பாளர்கள்
133, கீழமாசி வீதி, 4அடி சந்து, மதுரை -1.
போலீஸ் ஸ்டேஷனிலிருந்து 2வது கடை
விளக்குதூண் ஹரீஸ் பேக்கரியிலிருந்து 5வது கடை
Ph : 0452 - 4230330


PANDIAN
PERFORMANCE CHEMICALS
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098
Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care
droplets
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
ALPHA OLEPHIN SULPHONATES
SODIUM LAURYL ETHER SULPHATES
SODIUM LAURYL SULPHATES
CETOSTEARYL ALCOHOLS
FATTY ALCOHOLS
OLEO CHEMICALS
POLYMERS
PERFORMANCE CHEMICALS &
FRAGRANCES
Godrej
Godrej Industries Limited
IFF
Dealers in
K K Dinakaran
www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com
Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

*Feeling Good Is Second Nature*

# Lissy®

- Bra
- Panty
- Slips

*All Women Love*

Feeling Second Nature

*Manufacturer:*

**VGP APPARELS**

Saikrupa Industrial Estate (Dinbandu)
Shop No: 10, Near Shivam Wafers, Opp. P.L. Lokhande Marg,
Chembur(W), Mumbai - 400 089
Ph: 022 - 2525234, Cell: 89760 10072

**ஜெய்கங்கா அப்பேரல்ஸ்**
279, கீழ மாசி வீதி
விளக்குத்தூண் அருகில்
மதுரை – 1
செல்: 94430 21910

**P.G. India**
50, தெற்கு மாசி வீதி
லலிதா ஜுவல்லரில் எதிரில்
மதுரை – 1
செல்: 84382 71065

**வெங்கடேஸ்வரா டெக்ஸ் & கிட்ஸ் வியர்**
32, மஹால் 5வது தெரு
மதுரை – 1
செல்: 99650 40168






# உலகிற்கு சவால் கொடுக்கும் கொரோனா


**கே.எஸ். ஜேஷ் நாராயன்**

எம்.பி.பி.எஸ். இறுதி ஆண்டு மாணவர், வேலம்மாள் மருத்துவ கல்லூரி, மதுரை.


உலக வரலாற்றில் பல நூற்றாண்டுகளில் அவ்வப்போது பான்டெமிக் எனப்படும் தொற்று நோய்கள் உலகத்தையே அச்சுறுத்துகிறது இவ்வாறு நிகழும் நோய்கள் நம் மக்கள் தொகையை துரிதமாக அழிக்கும் தீய வல்லமை வாய்ந்தது என்பது வருத்தமான செய்தி. கடந்த மூன்று மாதங்களாக கோவிட் - 19 என்கிற கொரோனா வைரஸ் உலகத்தில் பரவி மக்களுக்கு கடும் பாதிப்பை உண்டாக்கிக் கொண்டிருப்பதை அறிவீர்கள். விஞ்ஞான ரீதியாக மருத்துவப் பிரிவு அபரிமிதமான முன்னேற்றம் அடைந்தும் பான்டெமிக் நோய்கள் இவ்வளவு அச்சம் கொடுப்பது ஏன்?

## பான்டெமிக் என்றால் என்ன?

சாதாரணமாக ஒரு நோய் தொற்று சிறிய வட்டத்தில் திடீரென பரவினால் அதை எபிடெமிக் என்று கூறுவோம். அதுவே உலகளவில் பல நாடுகளில் கண்டங்கள் தாண்டி பரவும் பொழுது அது பான்டெமிக் என்று அழைக்கப்படுகிறது. தம் வரலாற்றை ஆராய்ந்தால் பல ஆண்டுகள் இடைவெளியில் திடீரென்று ஒரு பான்டெமிக்கை எதிர்கொள்கிறோம். உதாரணமாக 2009ல் பன்றிக்காய்ச்சல் பரவி பல உயிரிழப்பு நேர்ந்தது. காலரா நோய் பலமுறை தாக்கியுள்ளது. ஆக இது புதிதல்ல. ஆனால் அதை எதிர்கொள்ளும்விதமும் நடவடிக்கைகளும் என்ன என்பதை கால இடைவெளியினால் மறந்து விடுகிறோம்.

## கொரோனா இதர பரவல் நோயைவிட வேறுபடுவது எப்படி...

கொரோனா வைரஸ் கிருமி முன்பு வந்த இதர ப்ளூ நோய் கிருமிகள் போல் விலங்குகளில் இருந்து வந்திருந்தாலும், இப்பொழுது வந்த கோவிட் - 19 பிரிவு மனிதர்களைத் தொற்றியிருப்பது இதுவே முதல் முறை. சாதாரணமாக மனித உடலில் தொற்றிக்கொள்ள ஆர்.என்.ஏ., அணுக்களில் சில மாறுபாடுகள் ஏற்பட்டு பின்புதான் தொற்றிக் கொள்ளும்.

## ஆரம்ப கட்டத்தில்

பத்து வருடங்களுக்கு முன்பை விட இப்பொழுது அறிவியல் முன்னேற்றம் சிறப்பாக இருந்தும், நம்மால் இந்த நோயை ஆரம்பகட்டத்தில் கட்டுப்படுத்த முடியவில்லை. கோவிட் - 19 என்னும் கிருமியின் முக்கிய அம்சம் அதனுடைய தொற்றுத்தன்மை தான். இந்த வைரஸ் கிருமி ஒருவரை தாக்கிய பிறகும், அதன் அறிகுறிகள் தெரிவதற்கு 5 முதல் 14 நாட்கள் ஆகலாம். ஆனால் இந்த நேரத்திலே அவர்கள் மூலமாக மற்றவர்களுக்கு பரவத் தொடங்கிவிடும். நோய் தொற்று அளவை Ro என்னும் அளவுகோல் மூலம் வரையறுக்கப்படுகிறது. பன்றிக் காய்ச்சலின் தொற்று அளவு (ஒன்று) ஆகும். அப்படி என்றால் சராசரியாக ஒரு நபர் இன்னொரு நபருக்கு பரப்புவார் என்று பொருள்




கோவிட் - 19 கிருமியின் தொற்று அளவு 2 முதல் 4 வரை இருக்கும் என்று கருதப்படுகிறது. அதாவது ஒருவர் சராசரியாக 2 முதல் 4 பேருக்கு பரப்புகிறார். கணித அடிப்படையில் பார்த்தால், மூன்று அல்லது நான்கால் பெருக்கப்பட்டால் மிக விசாலமாக பரவும் என்பது தெரிகிறது.

## தற்காப்பு முறைகள்

இது உணர்த்துவது என்னவென்றால், நோய் சிறிய அளவில் இருக்கும்போது தற்காப்பு முறைகள் சரியாக மேற்கொண்டால் இதை குறைத்துவிடலாம். இதற்கு சரியான உதாரணங்கள் தைவான் மற்றும் தென்கொரியா. தைவான் மற்றும் இத்தாலி நாடுகளில் சிறிய இடைவெளியில் தான் முதல் நோயுள்ள நபர் கண்டறியப்பட்டார். தைவான் தடுப்பு முறைகளை சிறப்பாக கையாண்டதால், நோயை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தது.

தென்கொரியாவில் நோய் சற்று பரவிய நிலையில் இருந்த போது, சீரான பரிசோதனைகள் மற்றும் பாதிக்கப்பட்டோரைத் தனிமைப்படுத்தி இந்த நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இத்தாலி நிலைமை நமக்குத் தெரியும்.

## என்ன செய்யலாம்

பான்டெமிக் நோய்களை உலக சுகாதார நிறுவனம் பல கட்டமாகப் பிரித்துள்ளது. இந்த கட்டங்கள் ஒரு கிருமி, விலங்குகளில் ஆரம்பித்து, முதல் மனிதனுக்கு தொற்றாகி, ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு சிறியளவில் பரவி, சமூக அளவில் வேகமாக பரவி நோயில் வீரியத்தை வெளிப்படுத்துகிறது. இதில் நாம் எளிதாக கட்டுப்படுத்தக் கூடிய கட்டம், சிறியளவில் பரவும் போது கட்டுப்படுத்துவதே ஆகும்.

அதை தொடர்பு நிலை 'கன்டெய்ன்மென்ட் ஸ்டேஜ்' என்று கூறலாம். தற்போது இந்தியா இந்த கட்டத்தில் தான் உள்ளது. ஆக இச்சமயத்தில் நாம் சரியான முறைகளைக் கையாண்டால் நமக்கு வெற்றி நிச்சயம்.

**முதலாவதாக** நாம் செய்ய வேண்டியது ஒருவருக்கு மற்றொருவர் குறைந்தது 3 அடி இடைவெளி வைத்துக்கொள்வது. ஏனென்றால் இந்த நோய் நீர்த்துளிகளால் பரவுகிறது. எனவே பொதுமக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்க வேண்டும்.

**இரண்டாவது** தும்மல் மற்றும் இருமல் மூலமாக எளிதாக பரவும். இந்த நோயைத் தடுக்க ஒரு கைத்துணியை வைத்து வாயை தும்மும்போது அல்லது இருமும்போது மூடிக்கொள்ள வேண்டும்.

**மூன்றாவதாக** கையை சுத்தமாக சோப் வைத்து 20 வினாடிகள் கழுவுவது அல்லது ஆல்கஹால் சார்ந்த சானிடைசர் வைத்து சுத்தப்படுத்துவது.

**நான்காவதாக** நோய் கண்டறியப்பட்டவருக்கு தனிமை வார்டில் சிறப்பு சிகிச்சை அளிப்பது மற்றும் நோய் சந்தேகம் உள்ளவர்கள் மற்றும் நோய் தொற்று வாய்ப்புள்ள வெளிநாட்டில் இருந்து வரும் பயணிகளை 14 நாட்கள் தனிமைப்படுத்துவதே ஆகும்.

## சிகிச்சை எப்படி

இதுவரை எந்தவிதமான மருந்தும் விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால் **ஹைட்ராக்சிக்ளோரோக் குவின்** என்னும் மருந்தை அளிக்கலாம் என்று ஆரம்பகட்ட ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது. பெரிய அளவிலான முழு ஆராய்ச்சியில் உறுதிப்படுத்தப்பட்டால், இது சிகிச்சை மருந்தாக அமையலாம். தடுப்பூசியும் ஆராய்ச்சி நிலையில் உள்ளது.



**எவ்வாறு தடுக்கலாம்**

பான்டெமிக் கிருமிகள் ஆரம்பமாகும் இடங்கள் சுகாதாரமற்ற இடங்கள் ஆகும். வைரஸ் கிருமியால் வரும் பான்டெமிக் நோய்கள் விலங்குகளில் இருந்தே வருகிறது.

புது நோய் கண்டறியப்பட்டால் மிக உஷாராகி முதல் நபரை தொற்றும் நிலையிலே தனிமைப்படுத்த வேண்டும். அதை பரவ விடாமல் தடுக்கும் முறைகளை செய்ய வேண்டும். கொரோனாவை நன்கறிந்து, முன் எச்சரிக்கையுடன் அதை துரத்தும் வழிகளை பின்பற்றி, அனைவரும் மகிழ்ச்சியாக வாழ இறைவனை பிரார்த்திக்கிறேன்.

## Highlights of PM Modi's speech



1. Paid obeisance to Dr. Ambedkar
2. Wished everybody the best on account of the several festivals the country is celebrating
3. Told how India acted early
4. Told how India fared better than many other nations
5. Praised CMs of all states and highlighted the constructive nature of discussion.
6. Lockdown across India continues till May 03, 2020
7. Appeal to all - Maintain discipline: A new hotspot springing up anywhere in the country will be a collective challenge, a collective failure;
8. More stringent lockdown measures till April 20 across the country
9. Lockdown might be relaxed (limited) after April 20 in places where hotspots are unlikely to spring up; however if the situation worsens, lockdown might be enforced back again in such places.
10. Supporting farmers and the poor is our firm priority.
11. We are prepared with over 1 lakh beds; over 600 Corona dedicated hospitals; work is going on for more measures.
12. Appeal to all to come forward to work towards creating a vaccine.

**Special appeal around seven measures**:

1. Take extra care of the elderly, especially those suffering from pre-existing ailments
2. Maintain strict discipline around lockdown, social distancing norms; wear masks
3. Boost immunity based on recommendations by the Ministry of Ayush.
4. Download the Arogya Sethu mobile app.
5. Take care of the poor and the hungry.
6. Compassion towards workers.
7. Salute to the Corona Warriors Let's maintain the fight; let's maintain our discipline, thank you.











# British Parliament Celebrates Linguistic Diversity of India



Making the 20th anniversary of the Launch of International Mother Language Day, the rich linguistic diversity of India was showcased at the Portcullis House of Commons, British Parliament.

Hosted by Bob Blackman MP and organised by Sanskruti Centre for Cultural Excellence, the event had 17 Indian Languages presented majority of them penned by the members of Indian diaspora living in Britain.

Rarely heard Indian languages in the UK such as Saurashtra, Ladakhi and Bishnupriya Manipuri were highlighted, written by famous writers and aritists such **Ravindra Konda (Saurashtra)**, Rinchen Wacher (Ladakh) and Dils Lakshmindra Kumar Sinha (Bishnupriya Manipuri)

These, along with Mangahi language, were presented for the first time bringing them all on one platform. A published compilation of the multi-lingual works titled "Incense-Kaavya Sugandha" was released on the occasion that included unique scripts such as Takri, Khudavadi, Maithili and Sharda. Specially written for the occasion, the poems covered a variety of subjects ranging from the beauty of language, human values in the current society, decrease of native language use, tributes to great personalities of the region and so on.

சிக்கல்களை எதிர்கொள்ளும் போது கூடவே
பல திறமைகளும் வெளிபடுகின்றன.

Presenters came from various regions in England, different walks of life and professions taking pride in their own more languages. Founder of Sanskruti Centre Ragasudha Vinjamuri has emphasised on the importance of leaving a legacy for younger generations and urged parents to take an active role in generating interest and keenness among children.

Dr. Vikas presented a poem in Maghi, Dr. Sahadve Swain in Odiya, Manu Khajuria in Dogri, Anupama Handoo in Kashmiri Chanda Jha in Ladakhi, Dri. Vipin Nadda in Himachal Panhadi, Inderpan Chandel in Punjabi, Ashish Mishra in Hindi, tonoya Barua Chaudhari in Assamese, Lekshmi Pillai in Malayalam, Kamalini Kausik in Saurashtra, Lumbini Bafna in Rajasthani, Sharad Jha in Maithili, Sangeeta Prasad in Bhojpuri and Bhavika Ramrakhyani in Sindhi.

Two things stook out in the program Dance by Children Tvish Rorane, Shreya Khane and Amushka Upadhyay on Sanskrit song, Manasa Satatam smaranceyam and enacting of Ragasudha Vinjanmuri accompanying the rendition of Tagore's poem Nirjharer Shoponbhongo by Sanchita Das Captivated the audiences. Shikha Varshney's efforts in the field of language promotion have been appreciated on the occasion. A valedictory appreciating Bob Blackman's recent honous of Padma Shri by the Government of India has been conducted and his role in supporting the Indian cause immensely commended.

Source - ASIAN LITE

# மாற்றம் ஒன்றே மாறாதது

இன்றைய இந்த நெருக்கடியான காலகட்டம் நமக்கு கற்றுக்கொடுத்த விஷயங்கள் நிறைய இருக்கின்றன. நம்மைப் பற்றி சிந்திப்பதற்கும், நமது வியாபார சூழ்நிலைகள் வரப்போகும் நாட்களில் வியாபார விஷயமாக நாம் எடுக்கப் போகும் முடிவுகளும் (BUSINESS DECISION), வியாபாரத்தில் அடுத்த நிலைக்கான ஏற்பாடுகளும் செய்து கொள்வதற்கு நிறைய நேரம் இப்பொழுது எல்லோர்ருக்கும் கிடைத்திருக்கிறது.

இந்த சந்தர்ப்பத்தை நன்றாக பயன்படுத்திக் கொண்டு இதையும் கடந்து செல்லலாம் என்ற மனநிலையோடு நாம் எடுத்து வைக்கப்போகும் காலங்கள் நன்றாக இருக்கும் என்ற தன்னம்பிக்கையுடன் நாம் நமது அணுகுமுறையை வைத்துக் கொண்டு, இந்த நெருக்கடியான காலத்தை துணிவுடன் எதிர்கொண்டு நமது பொருளாதாரத்தையும் நம்முடன் இருக்கும் வியாபார சம்மந்தமான நபர்களுக்காகவும் அவர்களின் வாழ்க்கைத் திறன் மேம்படுத்துவதற்காகவும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும். இந்த நேர்சிந்தனை எல்லா தரப்பு மக்களிடம் காணப்பட்டால் நிச்சயமாக ஒரு ஒளிமயமான எதிர்காலம் எல்லோருக்கும் உண்டு என்பதை வரும் காலங்களில் நாம் உணரலாம்.

நாம் “இல்லை” என்றால் வியாபாரம் ஓடாது என்ற நிலையில் இருந்தவர்கள் அல்லது அதிகாரத்தை பரவலாக்காமல் இருந்தவர்கள், வியாபாரத்திற்கு துணை புரிபவர்கள் மற்றும் நமது நிறுவன ஊழியர்கள் - நாம் இதற்கு முக்கியத்துவம் அளிக்காமல் இருந்தவர்கள் அல்லது அதனை பற்றி யோசிக்காதவர்கள் அவர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ளாதவர்கள் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று சொல்லலாம்.

**“கொரோனா” கற்றுத்தந்த பாடங்கள்:**

- அரசாங்கத்தின் கட்டமைப்பு
- தனியார் மருத்துவமனைகளை விட அரசாங்க மருத்துவமனையின் பயன்கள்
- அரசு இயந்திரத்தின் மீது நம்பிக்கை
- அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி கிடைத்தன.
- ஒட்டுமொத்த இந்தியாவை இந்த கோரப்பிடியிலிருந்து மிகுந்த சேதாரமில்லாமல் காப்பாற்றியது.
- தனிமனித ஒழுக்கம், தனிமனித கட்டுப்பாடு, கையெடுத்து கும்பிடுவது, முறையாக கை கால் கழுவுவது, தனிமனிதர்கள் தங்களின் வசதிக்கேற்ப உணவு, தேவையான பொருளுதவி மற்றும் பண உதவி செய்து மனிதநேய பண்பாட்டை வெளிப்படுத்தியது.
- சில தேவையற்ற செலவுகளை தவிர்த்தது, பொதுவிடத்தில் நேரத்தை வீணடிப்பதை தவிர்த்தது, கிடைக்கும் வசதிகளை பயன்படுத்திக் கொண்டு சிக்கனமாக வாழ கொரோனா கற்றுக்கொடுத்தது.

**S.S. ராம்சுந்தர்**



11.04.2020 - நமது சேம்பர், ரெட்கிராஸ் அமைப்பின் துணையுடன் திருநகர் ஸ்ரீநிவாசா காலனி, மற்றும் மஹாலெட்சுமி காலனியில் நமது நெசவாளர் குடும்பத்திற்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.




# கைகளைக் கழுவும் முறைகள்

**நன்றாக கைகழுவ குறைந்தது 30 வினாடிகள் தேவைப்படும்**



1. கைகளைத் தண்ணீரில் ஈரப்படுத்தவும்



2. தாராளமாகக் கை முழுவதும் சோப்பு போடவும்




3. கையோடு கை சேர்த்து தேய்த்துக் கழுவவும்



4. வலது விரல்களை இடது விரல் இடுக்குகளில் நுழைத்து மாறி மாறித் தேய்க்கவும்



5. விரல்களை கோர்த்து இரு கைகளையும் தேய்க்கவும்



6. கைகளை விரல் பின்பாகங்களை இடிக்கியிட்டுத் தேய்க்கவும்



7. கட்டை விரலை சுழற்சி இருகைகளையும் தேய்க்கவும்



8. பின்பக்கம் முன்பக்கமாக விரல்களை சுழற்சி மாறி மாறி தேய்க்கவும்



9. தண்ணீரில் நன்கு கைகளை அலம்பவும்

## செயலிகள் நமது செயல்களுக்கு வரமா – சாபமா

20-ஆம் நூற்றாண்டில் தொலைபேசி, தொலைக்காட்சி, கணினி, இணையம் ஆகியவை மனித வாழ்வின் ஒரு அங்கமாக வளத்துக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்தன என்றால் மிகையாகாது. 21 ஆம் நூற்றாண்டில் இவை அனைத்தையும் தன்னகத்தே கொண்ட கையடக்கக் கருவியாக அலைப்பேசி கண்டு பிடிக்கப்பட்டது. தொடக்கத்தில், அழைப்புகள் மற்றும் குறுந்தகவல்களுக்கு மட்டுமே பயன்படுத்தப் படக் கூடியதாக இருந்த அலைபேசிகள் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக திறன் பேசியாக (ஸ்மார்ட் ஃபோன்) விஸ்வரூபம் எடுத்து இன்று உலகை ஆட்டிப் படைத்து வருகின்றன. வரும் காலங்களில் பேசுவதற்காகத் தான் அலைபேசி கண்டுபிடிக்கப்பட்டது என்று சொன்னால் அதனைக் கேட்பவர்கள் சொன்னவரை மனநிலை சரி இல்லாதவர் என்று நினைக்கும் அளவிற்கு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.







PG India
Lilly Inskirts (100 plus colours available)
& Nighties manufacturers
50.South Masi St,Madurai-1.
(M)8072639441,0452-4963232
for online shopping visit: https://www.pgindia.in



P.R.CHANDRASEKARAN P.C.MYTHILI

மனிதன் இயங்க இதயம்
உலகம் இயங்க இணையம்

என்று சொல்லும் அளவில் இணையத்தை அலைபேசியில் இன்று உலகளவில் அனைவரும் பயன்படுத்தி வருகின்றனர். இன்று அலைபேசியில் இணையத்தை இணைக்காதவர்கள் இல்லை எனலாம், அப்படி இருந்தால் அவர்களை வேற்று கிரஹவாசிகளாக பலர் பார்ப்பதுண்டு.

முன்பெல்லாம் நிழற்படத்தை எடுக்க வேண்டுமென்றால் போட்டோகிராபரை அழைத்து நிழற்படத்தை எடுத்து அதனை பிரிண்ட் எடுத்துத் தான் பார்க்க முடியும், ஆனால் இன்றோ நினைத்த இடத்தில் நினைத்த நேரத்தில் நிழற்படம், காணொலி ஆகியவை எடுத்த உடனே பார்த்து, அவற்றை முகநூல், வாட்ஸ் அப், டிவிட்டர் போன்ற சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்து விடலாம்.

குண்டூசி முதல் அணுகுண்டு தயாரிப்பது வரை அனைத்து தகவல்களையும் உலகின் எந்த மூலையில் பதிவிட்டுயிருந்தாலும் காற்றலைகளின் உதவியால் நமது உள்ளங்கையில் தவழும் அலைபேசியில் வந்து குவிந்துவிடுகின்றன. இன்று இணையத்தில் இல்லாத தகவல்களே இல்லை என்றே கூறலாம். அது மட்டுமா தேடும் தகவல்களைத் தவிர அதனைச் சார்ந்த தகவல்களும், சாராத தகவல்களையும் கடல் அலையாக வந்துவிடும்.

பயணத்தின் போது ஓரிரு புத்தகங்கள், பத்திரிக்கைகள் எடுத்து சென்ற காலம் போய் இன்று அலைபேசியில் கோடிக்கணக்கான புத்தகங்கள், பத்திரிக்கைகள், அலைபேசியில் பயணச்சீட்டு முன்பதிவு, வங்கி பணப்பரிவத்தனை, பொருட்களை வாங்குதல், சேவைகளைப் பெறுதல், நேரில் சென்று கேட்கவேண்டிய பல்வேறு தகவல்களை இருந்த இடத்தில் இருந்து அலைபேசியில் தேடி நமது பொன்னான நேரத்தை மிச்சப்படுத்துகிறோம்.

இவ்விதம். மனிதர்களின் அன்றாட வாழ்வியல் நடவடிக்கைகளுக்கு பலவிதங்களிலும் உதவக்கூடிய சாதனமாகிய அலைபேசி, பல சமூகச் சிக்கல்களுக்கும் காரணமாக அமைகிறது. அறிவை மேம்படுத்திக் கொள்ள பயன்படுத்த வேண்டிய அலைபேசியை இன்றைய இளைஞர்கள் பலரும் வாழ்க்கையை வீணடிக்கும் பொழுதுபோக்காகப் பயன்படுத்துவது மிகவும் வேதனையானது.

ஸ்மார்ட் போன் மூலம் பொழுதுபோக்குச் செயலிகளை பதிவிறக்கம் செய்து காணொலி விளையாட்டுகளில் நீண்ட நேரம் ஈடுபட்டுத் தங்களின் பொன்னான நேரத்தை பெரும்பாலோர் வீணடிக்கின்றனர். புளு வேல், ப்ரீ பயர், பப்ஜி, கேண்டி கிரஸ், போன்ற விளையாட்டு செயலிகள் நேரத்தை மட்டுமல்ல மூளையை மழுங்க வைத்து அன்றாட செயலை செய்ய விடாமல் மூலையில் உட்கார வைத்துவிடுகிறது.

கடந்தாண்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 'ப்ளூவேல்' என்ற காணொலி விளையாட்டு, இளைஞர்கள் பலரை தற்கொலை செய்து கொள்ளத் தூண்டியதை நாம் இன்னும் மறக்க முடியவில்லை. இளைஞர்கள் மட்டுமின்றி, நடுத்தர வயதினரும் கூட 'ரம்மி' எனப்படும் சீட்டு மற்றும் MPL விளையாட்டை விளையாடிப் பணத்தையும், நேரத்தையும் விரயம் செய்கின்றனர்.

தன்னையும் தன்னுடைய சாகசங்களை பிறர் பாராட்ட வேண்டும் என்ற நோக்கில் மலைமுகடுகள், ஆற்றுபாலங்கள், நீர்வீழ்ச்சிகளில், கடலில் குளிக்கும் போது, மிருககாட்சி சாலை போன்ற இடங்களில் செல்ஃபி அல்லது காணொலி எடுத்து அதனை சமூக ஊடகங்களில் பதிவிடுவது ஒரு மன நோயாகவே ஆகிவிட்டிருக்கிறது.

**விழித்தரு　　தனித்திரு　　வீட்டில் இரு**


Sowndarya Traders
Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary
T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS
57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

இளம் பெண்கள் சிலர், விதவிதமான உடையணிந்து கொண்டு தங்களைத் தாங்களே கைப்படம் எடுத்து அவற்றைப் பொது தளமான சமூக ஊடகங்களில் பதிவேற்றி, அதனைப் பிறர் பாராட்டும்போது மகிழ்ச்சி கொள்கின்றனர். அதே சமயம், அந்தப் புகைப்படங்களும் காணொலிகளும் அவர்களது நண்பர்கள் தவிர வேறு பலரும் பார்க்கக் கூடும் என்பதை அறிந்தும் பதிவிடுகிறார்கள். இதனால் பல்வேறு விதமான சங்கடங்களுக்கும் உள்ளாகின்றனர்.

தற்போது இவற்றையெல்லாம் மிஞ்சும்படியாக, "டிக்டாக்' என்றொரு செயலி தற்போது பயன்படுத்தி அதன் மூலம் ஆடல், பாடல், மிமிக்ரி மற்றும் நடிப்பு போன்றவற்றில் தங்களது திறமைகளை வெளிக்காட்டுகின்ற குறுகிய காணொலிகளை இந்தச் செயலி பதிவு செய்து, நண்பர்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். இதனால் சிலரின் திறமைகள் வெளி உலகிற்கு தெரிவதோடு பல சமூக சீர்கேடுகளுக்கு வழிவகுக்கின்றன என்ற செய்தி பல்வேறு ஊடகங்களில் வந்தாலும் அதனை பயன்படுத்துவோர் குறைந்தபாடில்லை. இதனால் பல உயிரிழப்புகளுக்கும் காரணமாகி வருகிறது.

தகவல் தொடர்புக்கும், அறிவுப்பகிர்வுக்கும் மட்டுமே பயன்பட வேண்டிய அலைபேசியை, பொழுது போக்குவதற்காகப் பயன்படுத்துவதை விட சமுதாய வளர்ச்சிக்கு எதிராகப் பயன்படுத்துவது அதிகரித்துயிருப்பது வேதனைக்குரிய விஷயமாகும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள மூத்த தலைமுறையினர் தங்கள் மகன்/மகள்களின் அலைபேசியில் தேவையற்ற செயலியை நிறுவ அனுமதிக்கக்கூடாது. மேலும், வேண்டாத செயலிகளிலும், காணொலி விளையாட்டுகளிலும் தங்களின் பொன்னான நேரத்தை இழந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுவது மிகமிக முக்கியம்.

எந்த ஒரு கண்டுபிடிப்பிலும் சாதக பாதகங்கள் இருப்பது நிதர்சனம். நமது செயல்களால் தான் அதனை சாதகமாகவோ பாதகமாகவோ செயல்படுத்த முடியும். அதே போல் அலைபேசி செயலியால் எண்ணற்ற சாதகங்கள் இருந்தாலும் சில பலர் ஏனோ சாதகங்களை விட்டு பாதங்களுக்கு பயன்படுத்துகிறார்கள் என்பது மில்லியன் கேள்வி.

ஓய்வு பெற்ற முதியோர்களுக்கு ஒரு சிறந்த பொழுதுபோக்கு சாதனமாக பயன்படும் இந்த அலைபேசி தான், சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் பொன்னான காலத்தை வீணடிக்க செய்கிறது.

செயலிகளால் நாம் செய்யும் செயல்களில் தமக்கும், சமூகத்திற்கும், நாட்டிற்க்கும் நன்மைத் தரும் செயல்கள் செய்து வந்தால் இந்த நூற்றாண்டில் செயலி நிச்சயம் வரமாக இருக்கும்.

**நாட்டில் உள்ள 10 பொதுத் துறை வங்கிகள் இணைக்கப்பட்டு 4 வங்கிகளாக செயல்படத் தொடங்கின.**

**பஞ்சாப் நேஷனல் வங்கியுடன்**
யுனைடெட் பாங்க் ஆஃப் இந்தியா
ஓரியண்டல் பாங்க் ஆஃப் காமர்ஸ்

**கனரா வங்கியுடன்** - சிண்டிகேட் வங்கி

**இந்தியன் வங்கியுடன்** - அலாகாபாத் வங்கி

**யூனியன் பாங்க் ஆஃப் இந்தியாவுடன்**
ஆந்திரா வங்கி
கார்ப்பரேஷன் வங்கி

## நெஞ்சார்ந்த நன்றிகள்

இந்த பேரிடர் காலத்தில் சமூகத்திற்கு பற்பல அமைப்புகளுடன் இணைந்து சமூக மக்களுக்கு உதவி செய்து வரும் சேம்பர் அங்கத்தினர்களுக்கும், சமூக அமைப்புகளுக்கும் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் மனதார வாழ்த்தி தனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

## அன்பான அங்கத்தினர்களுக்கு

லாப் சமாச்சார் இதழ் தற்போது இ-புக் வடிவில் அங்கத்தினர்களுக்கும், நம் சமூக மக்களுக்கும். நமது சேம்பர் இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இதனால் உலகலாவிய வாசகர் கொண்ட நமது இதழுக்கு தங்களது நிறுவன விளம்பரங்களைத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இதழ் குழு



# பளபளக்கும் தங்கம்

பளபளக்கும் மஞ்சள் உலோகம் என்று அழைக்கப்படும் தங்கம் என்றும் உலகின் முடிசூடா மன்னனாக வலம் வந்துகொண்டிருக்கிறது..!

உலகளாவிய பொருளாதார நெருக்கடி காரணமாக தற்போது உலகம் முழுவதற்கும் ஒரே நிலையான முதலீட்டு விருப்பமாகத் தங்கம் தான் கண்ணுக்குத் தெரிகிறது. இதனால், அதன் மீது மோகம் மேலும் அதிகரித்துள்ளது. எந்தவொரு போரின் போதும் அல்லது வேறு எந்த நெருக்கடியிலும் எப்போதுமே மக்கள் தங்கள் முதலீடுகளை தங்கத்தில் தான் மேற் கொண்டுள்ளதாக வரலாறு கூறுகிறது.

1964-இல் 24 காரட் (10 கிராம்) தங்கம் ரூ.63.25-இல் விற்கப்பட்ட தங்கம். தற்போது ரூ.45,000-ஐ கடந்துள்ளது.

தங்கத்தின் விலை இந்த ஆண்டு இறுதிக்குள் 24 காரட் (10 கிராம்) ரூ .50,0000 முதல் ரூ55,000-க்குச் செல்லும் என வல்லுநர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

தங்கத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து வந்தாலும், துணிந்து முதலீடுகளை மேற்கொள்ளலாம் என்று நிதி ஆலோசகர்கள் பரிந்துரைக்கின்றனர்.

SIP (Systematic Investment Plan) என்று சொல்லப்படும் முறையான முதலீட்டுத் திட்டத்தின் மூலம் தங்கத்தில் முதலீட்டை மேற்கொள்ளலாம்.

குறுகிய, நீண்ட கால அடிப்படையில் தங்கத்தின் விலை ஏற்றம் பெறத்தான் செய்யும். முதலீட்டைப் பொருத்தவரையில், நீண்ட கால அடிப்படையில் முதலீட்டுக்கு தங்கக் கட்டிகளை வாங்கி வைக்கலாம்.

ஊரடங்கால் இந்தியாவில் திருமணம் போன்ற விஷேசங்கள், பண்டிகைக் கொண்டாட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன,. ஊரடங்கு முடிவுக்கு வந்த பின்னர், நகை வியாபாரம் சூடுபிடிக்கும் தங்கத்தின் தேவைப்பாடு ஒரு பெரிய எழுச்சியைக் காணும்

**நிகழ்காலத்தை இயல்பாக நுகரத் தெரிந்தவனே எதிர்காலத்தை தன் வசப்படுத்துகிறான்.**
**எதிர்பார்ப்புகளை செயல்படுத்தித் தெரிந்தவனே நிகழ்காலத்தில் அதனை மகிழ்வோடு சந்திக்கிறான்**



சிறந்த தையல் !
குறைந்த விலையில் !
நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!
ரேவதிஸ் டெக்ஸ்
பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்
1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223

# கரோனா வைரஸ் ஊரடங்கு நடவடிக்கை; சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் மீள ஓராண்டாகும்: அரசு, வங்கி சலுகைகள் மிகவும் அவசியம்

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தற்போதைய ஊரடங்கு நடவடிக்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளன. இதிலிருந்து நிறுவனங்கள் மீள்வதற்கு மூன்று ஆண்டுகள் வரை ஆகும் என்று சிப்காட், இருங்காட்டுக் கோட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் கே.பாலசுப்ரமணியன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:

"எதிர்பாராத வகையில் இந்த ஊரடங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. இதனால் மார்ச் மாதத்தில் 50 சதவீத அளவுக்குக் கூட வர்த்தகம் நடைபெறவில்லை. இதேபோல ஏப்ரல் 14 வரை கதவடைப்பு நீடித்துள்ளதால் ஏப்ரல் மாத விற்பனை, விநியோகம் எதுவும் நடைபெறாது.

விவசாயத்துக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் வேலை வாய்ப்பை அளிப்பது சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்தான். இத்தொழிலில் தமிழகம் தவிர பிற மாநிலங்களிலிருந்து பணியில் ஈடுபட்டிருப்போர் அதிகம். குறிப்பாக சென்னையைச் சேர்ந்தவர்கள் 25 சதவீதம் எனில் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் 25 சதவீதம், அதேசமயம் பிற மாநிலங்களிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் 50 சதவீதம் பேர்.

ஊரடங்கு அறிவித்ததிலிருந்தே தங்கள் சொந்த மாநிலத்துக்கும், மாவட்டங்களுக்கும் பலர் திரும்பி விட்டனர்.

இதனால் ஊரடங்கு திரும்பப் பெறப்பட்டாலும் உடனடியாக பணியாளர்கள் கிடைப்பது மிகவும் சிரமம். வெளி மாநிலப் பணியாளர்கள் உடனடியாக பணிக்குத் திரும்ப மாட்டார்கள்.

அன்றாடப் பணிகளை நடத்த நிதி தேவை மிகவும் அவசியமாகும். சப்ளை செய்த நிறுவனங்களிடமிருந்து உடனடியாக பணம் கிடைக்காது. இதேபோல பொருள்களை சப்ளை செய்யும் நிறுவனங்கள் உடனடியாக பணம் தந்தால் மட்டுமே பொருள்களை சப்ளை செய்ய முடியும் என்ற நிபந்தனை விதிப்பர். ஊழியர்களும் தங்களது வீட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அட்வான்ஸ் கேட்பர். அதையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

மின் கட்டணம் செலுத்துவதற்கு தற்போது சலுகை தரப்பட்டுள்ளது. இது மேலும் நீட்டிக்கப்பட வேண்டும்.

வங்கிக் கடன் நிலுவை, மின் கட்டணம், ஊழியர்களுக்கான இஎஸ்ஐ, இபிஎப் மற்றும் ஜிஎஸ்டி உள்ளிட்டவற்றோடு அரசுக்கான வரியையும் செலுத்த வேண்டியிருக்கும். இவை அனைத்துமே அடுத்தடுத்து எதிர்கொள்ள வேண்டிய நிதிச் சுமைகளாகும்.

தொழிற்சாலைகள் நீண்டகாலம் இயங்காததால் அவற்றை மீண்டும் செயல்படுத்த சிறிது காலம் பிடிக்கும். இன்ஜினீயரிங், ஆட்டோமொபைல், எர்த் மூவிங் எக்யூப்மென்ட், எலிவேட்டர்ஸ் உள்ளிட்ட தொழில் நிறுவனங்கள் சகஜ நிலைக்குத் திரும்பும்போது தான் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஆர்டர்கள் கிடைக்கும். இதனால் மே, ஜூன் மாதங்களிலும் புதிய ஆர்டர்கள் கிடைப்பது சிரமம். சரக்கு போக்குவரத்து சகஜ நிலைக்குத் திரும்பினால்தான் பொருள்கள் விநியோகம் சீராக இருக்கும்.

**வெற்றி பெற வேண்டும் என்ற பதற்றம்
இல்லாமல் இருப்பது தான்
வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி.**


பதிவு எண்: 16 / 2002 ☎ 0452-2679676

மகாத்மா முதியோர் இல்லம்

Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்

7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.

website : www.mahathmaoldagehome.com E-mail : mmilmalarkulu@gmail.com

நிறுவனர்கள்

M.S. சந்திரசேகர் 98421-44555

J.R. ரமேஷ் 97861-40570

B.J. மகேசுவர்லால் 93444-51607

T.R. குமரன் 94437-23337

M.R. பிரேம்குமார் 93444-51605

தற்போதைய ஊரடங்கு நடவடிக்கையால் சேவைத்துறை, சில்லறை வர்த்தகம், பார்மா, ஹெல்த்கேர், தொலைத் தொடர்பு உள்ளிட்ட தொழில்துறைக்கு 10 சதவீத பாதிப்பு ஏற்படும்.

ஆட்டோமொபைல், கட்டுமானம், நுகர்வோர் தயாரிப்பு பொருள்கள், லாஜிஸ்டிக், ஜவுளி, தோல் தொழில்துறைக்கு 30 சதவீத அளவுக்கு பாதிப்பு இருக்கும்.

எண்ணெய், எரிவாயு, விமான போக்குவரத்து, சுற்றுலா,காப்பீடு, ஹோட்டல் சார்ந்த தொழில்கள் 50 சதவீத அளவுக்கு பாதிக்கப்படும்.

ஏப்ரல் பிற்பாதியில் ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும், மே மற்றும் ஜூன் மாதங்கள் வரையில் நிறுவனங்களைச் செயல்படுத்துவது மிகவும் சிரமமாகத்தான் இருக்கும். 3 ஷிப்ட்கள் பணி நடைபெற்ற நிலை மாறி இனி ஒரு ஷிப்ட் நடைபெறும் அளவுக்கு ஆர்டர்கள் கிடைப்பது சந்தேகம். இதனால் வேலையிழப்பும் இருக்கும்.

ஏற்றுமதி நிறுவனங்கள் குறிப்பாக திருப்பூர் பின்னலாடை மற்றும் வாணியம்பாடி, வேலூர் பகுதிகளைச் சேர்ந்த தோல் தொழில் நிறுவனங்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளன. ஏற்கெனவே ஆர்டர் அளித்துள்ள நிறுவனங்கள் இந்த வைரஸ் பரவல் காரணமாக தங்களது ஆர்டர்களை ரத்து செய்துள்ளன. இதனால் இவை அனுப்ப வேண்டிய பெருமளவிலான ஆர்டர்கள் தேங்கியுள்ளன. இவற்றுக்காக வங்கிகளில் பெற்றிருந்த கடன் தொகைகளை செலுத்த வேண்டிய கட்டாயமும் உருவாகியுள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது 2020-ம் ஆண்டு தொழில்துறையினருக்கு குறிப்பாக சிறு, குறு, நடுத்தர தொழில்நிறுவனங்களுக்கு மிகவும் சவால் நிறைந்த ஆண்டாகிவிட்டது. கடந்த ஆண்டு நடைபெற்ற வர்த்தகத்தில் 50 சதவீத அளவுக்குக் கூட நடைபெறுவது சந்தேகம்

கரோனா வைரஸ் பரவலைத் தடுக்க தற்போது சில நிர்வாக நடைமுறைகளை தொழிற்சாலை ஆணையகம் பிறப்பித்துள்ளது. இதைச் செயல்படுத்துவதன் மூலம் நிறுவனங்களுக்கு செலவுதான் அதிகரிக்கும். மேலும் ஊழியர்களின் உடல் நலனைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். முகக் கவசம் உள்ளிட்டவற்றை வழங்க வேண்டும்.

அரசு அளிக்கும் நிவாரணங்கள் அதாவது மூன்று மாதங்களுக்குப் பிறகு தவணை செலுத்துவது உள்ளிட்ட சலுகைகள் போதுமானதல்ல. மறு சீரமைப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்கி இத்துறையினர் மீண்டு எழ வழி வகை செய்ய வேண்டும். சிறு, குறுந்தொழிலில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கு அளிக்கப்படும் மானியத் தொகையை 40 சதவீதமாக அதிகரிப்பதன் மூலம் இத்துறையில் முதலீடுகள் அதிகரிக்கும். இதன் மூலம் வேலையிழப்பைத் தவிர்க்கலாம்.

விற்பனை வரி உள்ளிட்ட சலுகைகள் பிற நாடுகளில் அறிவிக்கப்பட்டுள்ளன. அதை இந்தியாவும் பின்பற்றலாம். குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஜிஎஸ்டி செலுத்தும் சலுகையாவது அளிக்கலாம்.

அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு அளிக்க வேண்டிய தொகையை உடனடியாக வழங்க உத்தரவிட வேண்டும். இதன் மூலம் நிதி புழக்கம் ஓரளவு ஈடுகட்டப்படும்.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறையைப் புறக்கணித்தால் மிகப் பெரும் வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகும். இத் துறையின் பிரச்சினைகளை உரிய கண்ணோட்டத்தில் அணுகினால் குறைந்தபட்சம் ஓராண்டிலாவது இந்நிறுவனங்கள் ஓரளவுக்கு தங்களை தக்க வைத்து முன்னேற்றமடையும்''. இவ்வாறு பாலசுப்ரமணியன் குறிப்பிட்டார்.

நன்றி - தி ஹிந்து


AWARDS
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award
ROYAL ROMANTIC
No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்
“ஷர்வ ரக்சன்” MRS
BEST NUMEROLOGIST
பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வசியம் மிகுந்த பெயர்
"எண் கணித ஜோதிட" முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும்
திருமணப் பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்
FOR APPOINTMENT
98421 11411






Published by : K.K. Gnana Prabhakaran on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.
Printing by : K.R. Ramalingam @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : K.K. Gnana Prabhakaran

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்
JSW COLOURON+ கூரைகள்
JSW Steel
JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக
ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்
ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.
18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.
போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63
கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.
Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்
Meerakunj® RIGID PVC PIPES, FITTINGS & TANKS
AN ISO 9001 : 2008 COMPANY
Trust us with all your Electrical Plumbing and Agri needs...
Architect's First Choice
Architects Suggest ...
The right way to sensible plumbing
Specialy Made for Borewells
Specialy Made for Watersupply
வாட்டர் டேங்க்கிற்கு 10வருட வாரண்டி
மீரா குஞ்ச் பாலிடிரேடர்
17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.
போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372
E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

# வேங்கடசூரி சுவாமிகள்

ஸௌராஷ்ட்ர இலக்கியங்களிலேயே தலைசிறந்த படைப்பாளராக மகாகவி, வரகவி என்று அனைவராலும் போற்றப்படுபவர் வேங்கடசூரி. இவருடைய சங்கீத ராமாயணம் மிகவும் புகழ் பெற்றது. இவரது காலம் 1817-1889 ஆகும். அப்போதைய தஞ்சை மாமன்னர் சிவாஜி மகாராஜாவின் ஆஸ்தான கவிஞராக இருந்தவர். மன்னரின் மகள் திருமணத்தின்போது இவர் பாடிய ஸௌராஷ்ட்ர மொழி மங்களாஷ்டகம் இன்றும் அனைவராலும் விரும்பி பாடப் படுகிறது. இராமாயண காவியத்தை ஒரே சுலோகத்தில் அடக்கிப் பாடியிருப்பது இவருடைய திறமைக்குச் சான்று. மேலும் நௌகா சரிதம் என்னும் காவியத்தை சமஸ்கிருத மொழியில் எழுதியுள்ளார். ஸாலக்கிராம மகிமை மற்றும் மராட்டிய மொழியிலும் இலக்கியம் படைத்துள்ளார். வேங்கடசூரி சுவாமிகள் பதினெட்டு இலக்கியங்களைப் படைத்துள்ளதாக வரலாறு சொல்கிறது.

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.04.2020 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

TÜV INDIA
An ISO 9001:2015 Certified Company

THE CONSTRUCTIVE COMPANY
www.tcco.co.in

Design & Construction of Industrial Buildings, Mixed Use Buildings, Residential Apartments, Academic Institutions, Aircraft Hangars, Uber Luxury Villas, Special Structures.

Land Line: 0452-25 81 450
Email: info@tcco.co.in

Some of our Completed Projects






HEAD OFFICE :
No 264, LIG Colony, Opp. SUNDARAM PARK,
OFF LAKE VIEW ROAD, KK NAGAR , MADURAI - 625 020

VSOC — Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy, Joint Replacement

VALE SPECIALTY ORTHO CLINIC
வேல் சிறப்பு எலும்பியல் மையம்
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement
45, கலெக்டர் ஆபீஸ் ரோடு, ஹோட்டல் ஸ்டார் ரெசிடென்சி எதிரில், அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை - 20.
Ph: 0452-4367597, 97871 91156 email : knsubra@yahoo.com | Web : www.shoulderarthroscopy.co.in

- தீராத மூட்டு வலி உள்ளவர்கள்
- தோள்பட்டை வலி உள்ளவர்கள்
- மாடிப்படி ஏறி / இறங்க சிரமப்படுபவர்கள்
- விளையாட்டு காயம் அடைந்தவர்கள்



Dr. K.N. SUBRAMANIAN MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

கைத்தறியில் ஓர் புதுமை
Electronic Jacquard




Technical Details :
- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm




Applications :
- Sarees
- Bed Sheets
- Furnishing
- Dress Material
- Blankets
- Made Ups
- Shirting



N.S. Rajan

SRE CORPORATION
359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com



T.S. Saravanan

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org